மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம் டிசம்பர் மாதம் 17ம் நாள்
ஸ்ரீபிலவ ஆண்டு மார்கழி மாதம் 02ம் நாள் வெள்ளிக்கிழமை
CNR No. TNMD19000016-2021
**I.A . No. 1177/2021**
**in**
**O.S. No. 05/2021**

1. மு. அம்மாவாசை
2. மு. சக்கரையம்மாள்

..... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

சங்கர்

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 11.11.2021ம்தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு N.சக்திவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.M. ரமணி அவர்கள் ஆஜராகியும், கடந்த 16.12..2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் வாதி தரப்பில் சான்றாவணங்களாக குறியீடு செய்வதற்கு நீதிமன்றத்தில் காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ளக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதியைக்கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது, அசல் வழக்கு பிராதுடன் 4வது ஆவணமாக 23.11.2020ம் தேதியிட்ட தாவா சொத்திற்குரிய 10(1) கணினி பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி பட்டாவின் சான்று நகல் வாடிப்பட்டி தலைமையிடத்து துணை

வட்டாட்சியரால் 21.01.2014ம் தேதியில் வழங்கப்பட்டது தற்போது தான் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், அதேபோல் தாவா சொத்தில் உள்ள கிணற்றுக்கு அரசு இலவச மின் இணைப்பு எண். 160-007-266 புகைபட நகல் தாக்கலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் அசல் தற்போது தான் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கு, இம்மனுவினை அனுமதிக்கும்படி வாதுரைக்கப்பட்டது.

**<u>2) எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுவில் கண்டுள்ள விபரங்கள் தவறானது ஆகும். அசல் வழக்கானது வாதி தரப்பு விசாரணைக்காக உள்ள நிலையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், ஏற்கனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண். 53/2014ன்படி வழக்கு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும். தற்சமயம் நீதிமன்ற நேரத்தை வீணாக்கும் உட்கருத்துடன் இந்த நிர் அசல் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவில் குறிப்பிட்டது போல், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தற்சமயம் தான் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றது என்பது முற்றிலும் பொய்யானதாகும் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தவேண்டுமென்ற உட்கருத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்படி எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

4) இருதரப்பும் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது வாதிகள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கும் பிரதிவாதிகளைக்கட்டுப்படுத்தி நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்யும்பொழுது, முதலாவது ஆவணம், அசல் வழக்கு பிராதுடன் 4வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கணினி பட்டாவின் சான்றிட்ட நகல் தற்சமயம் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்திற்கும் மனுவில் தற்சமயம் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்திற்கும் எவ்வித முரண்பாடு இல்லாத நிலையில், மேற்படி ஆவணமும் தாவா சொத்தான சர்வே எண். 717/5 தொடர்பானதாக இருப்பதால், அதனை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) அதேபோல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டாவது ஆவணம் அசல் வழக்கு பிராதுடன் 8வது ஆவணமாக புகைப்பட நகலாக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் அசல் மட்டுமே தற்சமயம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் புகைப்பட

நகல் தாக்கல் செய்ய இயலாது என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும்.
இது தொடர்பாக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் Dhana Lakshmi (vs) Muniyammal @ Senthamarai என்ற வழக்கில் 2016(5) LW 76 என்ற சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது. அதன்படி,

"Xerox copy cannot be marked and the court below ought not to have marked the said xerox copies, even there was no objection by the other side" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்

எனவே மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2வது ஆவணமாகிய மின்கட்டண அட்டையின் அசலை ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6) மேலும் தாவா சொத்து தொடர்பான அனைத்து சான்றாவணங்களையும் உள்ளடக்கி தீர்வு காண்பது வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முழுமையாகவும், அறுதியாகவும் தீர்வு காண்பதற்கு இம்மனுவினை அனுமதிப்பதே நியாயமானது மற்றும் இயற்கையின் நியதிக்குட்பட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) மேலும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதோ அல்லது குறியீடு செய்வதால் மட்டுமே நிரூபணம் ஆகாது என்பதும், வழக்கு தரப்பினர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை அதனை ஏற்கும் நிலையிலே தள்ளுபடி செய்யக்கூடாது என்பதும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் அடியிற்கண்ட வழக்கில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1) "**S<u>undram Dyna cast Pvt ltd (vs) Roas contmls case which was reported in 2011(2) LW 56(Mad)</u> <u>filing of document Rejection of:</u>** mere filling of document would not bar responds from questioning admissibility of resolution hence admissibility or veracity of document cannot be gone into at inception stage. Therefore order of court rejecting filling of document unjustified."

2) "<u>Murugesan (vs) Arumugam case reported in 2017 (4) MLJ 594,</u> the Hon'ble court of Madras held that, The evidence produce by a party cannot be shutdown at the threshold itself. The court has to decide the genuineness and relevancy of the document only after let in conclusion of the trail by appreciating the evidence by the parties. On such appreciation the court can either accept or reject the same and deliver the judgment.

"மேலும் வாதி தரப்பில் ஆவணங்களை காலதாமதமாக குறியீடு செய்வது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது._

**Dahiben (v) Arvindbhai Kalyanji Bhanusali, 2020(5) CTC 471 (SC)**

**Order 7 Rule 14(1) – Production of documents.** - Order 7 Rule 14(1) – Production of documents. - Order 7 Rule 14(1) of CPC, provides for production of documents, on which the plaintiff places reliance in his suit.
எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

8) எனவே மேற்கண்ட இருதரப்பு வாதுரைகள் மற்றும் பொருண்மைகள் மற்றும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடுகளின்படி இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருந்தபோதிலும் இம்மனு நடவடிக்கையினால் எதிர்தரப்பினர்க்கு ஏற்பட்ட காலம் மற்றும் பொருளாதார இழப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ரூ.500/- செலுத்துவதின் பேரில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, இம்மனு நடவடிக்கையினால், வழக்கு நடவடிக்கையில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள கால இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ரூ.500/- செலவுதொகையாக 22.12.2021க்குள் செலுத்தும் பட்சத்தில் அனுமதிக்கப்படுகின்றது என்ற நிபந்தனையின் பேரிலும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கு பொருண்மைகளுக்கு ஏற்புடையதாக இருக்கும் பட்சத்தில் அனுமதிக்கக்கூடியது என்ற நிபந்தனையின் பேரிலும், அடுத்த கேட்பு நாளில் மனுதாராகள்/வாதிகள் விசாரணை செய்யப்படவேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலும், இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது.
பணம் செலுத்தப்பட்டதை பதிவு செய்வதற்கான அடுத்த கேட்பு நாள் : 22.12.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//